# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.81/2022

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 18–03–2026.

பெயர் = ராஜேஸ்வரி

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) தாவாச்சொத்து எனக்கு ஆதியில் பாத்தியம் என்றால் சரிதான். தாவாச்சொத்தை தானப்பத்திரம் மூலம் 04.03.2022 ல் பதிவு செய்துகொடுத்தேன் என்றால் சரிதான். அந்த தேதியிலிருந்து வாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தானப்பத்திரம் எழுதிக்கொடுத்த தேதியிலிருந்து வாதி தாவாச்சொத்தில் இருந்தார் அதன்பின்பு அங்கு குடியிருக்கவில்லை என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தில் வடக்கே உள்ள பகுதியை எனது மற்றொரு மகனுக்கு அதே தேதியில் தானப்பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். வாதிக்கு எழுதிக்கொடுத்த தானப்பத்திரத்தில் என் கணவரும், என் மகன் ராஜேஷ்பாபுவும் கையெழுத்து செய்துள்ளனர் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு மேற்கே ஓடை புறம்போக்கில் ஒரு அறை புதியதாக வாதி கட்டினார் என்றால் சரிதான். எவ்வளவு ரூபாய் செலவழித்தார் என எனக்குத் தெரியாது. ராஜேஷ்பாபுவிற்கு எழுதிக்கொடுத்த இடத்திற்கும் மேற்கே ஓடைப்புறம்போக்கில் ஒரு அறை புதியதாக அவர் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல.

(2) என் பராமரிப்பிற்கும், என் கணவர் பராமரிப்பிற்கும் வாதி எங்களுக்கு எவ்வளவு தொகை கொடுத்துள்ளார் என்றால் எந்த தொகையும் கொடுக்கவில்லை என சாட்சி கூறுகிறார். வாதி எங்களுக்கு பராமரிப்புக்காக ரூ.5 லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல. ராஜேஷ்பாபுவின் தூண்டுதலின்பேரில் தானப்பத்திரத்தை ரத்துசெய்ய 2022 லிருந்து முயற்சிசெய்துவருகிறோம் என்றால் சரியல்ல. 2022 ல் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வாதியையும், வாதியின் மனைவியையும் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். பின்னர் வாதி எங்களுக்கு கொடுத்த 5 லட்சத்தையும், அறை கட்டிய செலவு 5 லட்சத்தையும் சேர்த்து திரும்ப

கொடுத்தவிட்டார் தானப்பத்திரத்தை ரத்து செய்யலாம் என சொல்லி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பாமல் ராஜேஷ்பாபுவின் பேச்சை கேட்டுக்கொண்டு வாதிக்கு தொடர்ந்து இடைஞ்சல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

(3) வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் முதலில் எண்ணெய் வியாபாரம் செய்தார் தற்போது நெசவு வேலை செய்வதாக சொல்வார்கள் எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். வாதி அறை கட்டுவதற்கு நான் பணம் கொடுத்தேனா என்றால் 3 பவுன் நகையும், 2 லட்சம் பணமும் கொடுத்துள்ளேன். அதற்கு ஆதாரம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வாதிக்கும் எங்களுக்கும் என்ன பிரச்சனை என்றால் அவர் எங்களை பராமரிக்காததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்து வீட்டில் யார் தற்போது குடியிருக்கிறார்கள் என்றால் யாரும் குடியிருக்கவில்லை. நான் தாவாச்சொத்திலிருந்து எப்போது காலி செய்தேன் என்றால் 2022 ற்கு பிறகு காலி செய்தேன். 3 பவுன் நகையும், 2 லட்சம் பணம் கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் அவ்வாறு வாதிக்கு பணம் கொடுக்க அவசியமில்லை அவர் நன்றாக சம்பாதிக்கிறார் என்றால் சரியல்ல. மேற்கண்ட தொகைகளை தவிர எண்ணெய் மில் வைப்பதற்கு 3 லட்சம் வாங்கியுள்ளார் என சாட்சிகூறுகிறார் வேறு எந்த தொகையும் என்னிடம் வாங்கவில்லை என சாட்சி கூறுகிறார்.

(4) மேற்கண்ட தொகைகளை கொடுப்பதற்கு எனக்கு என்ன வசதியுள்ளது என்றால் நகை என்னிடம் இருந்தது கொடுத்தேன் பணம் வட்டிக்கு வாங்கி கொடுத்தேன் என சாட்சி கூறுகிறார். தற்போது நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் வீட்டு வேலை செய்து வருகிறேன். என் கணவர் ITC கம்பெனியில் கணக்கு எழுதி ரூ.6000 மாதம் சம்பாதிக்கிறார். ஆரம்பத்திலிருந்து வீட்டுவேலை செய்து வந்தேனா என்றால் நெசவு தொழில் சொந்தமாக வைத்திருந்தேன். நான் சொல்வதுபோல் தொகை எதுவும் கொடுக்கவில்லை அவ்வாறு கொடுப்பதற்கு வசதியில்லை என்றால் சரியல்ல. வாதி எங்களை நன்றாக பராமரித்துவந்தார் என்றாலும், என் மற்றொரு மகன் ராஜேஷ்பாபுவின் தூண்டுதலின்பேரில் வாதிக்கு தொந்தரவு கொடுத்துவருகிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 உத்தரவின்படி என் இரண்டு மகன்களுக்கும் எழுதிக்கொடுத்த தானப்பத்திரங்களையும் ரத்துசெய்துவிட்டேன் என்றால் சரிதான். வாதிக்கு எழுதிக்கொடுத்த

தானப்பத்திரத்தை ரத்துசெய்த உத்தரவின்மீது சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் வாதி மேல்முறையீடு செய்து தானப்பத்திரத்தை ரத்து செய்ய ஏற்பட்ட உத்தரவு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் ஆஜராகினேனா என்றால் வக்கீல் வைத்து ஆஜராகியுள்ளேன்.

(5) பி.வா.சா.ஆ.4 உத்தரவு நிறுத்திவைக்கப்பட்டுள்ளதால் வாதியின் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மற்றொரு மகன் ராஜேஷ்பாபுவிற்கு எழுதிக்கொடுத்த தானப்பத்திரத்தையும் ஏன் ரத்து செய்தேன் என்றால் நீங்கள் இருக்கிறவரை அந்த சொத்து எனக்குவேண்டாம் என சொன்னதால் ரத்து செய்துவிட்டேன். எங்களுக்கு பிற்பாடு தாவாச்சொத்துக்களை என் மகன்கள் இருவரும் சரிபாதியாக பிரித்துக்கொள்ள எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S